# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2390/28 - 2024 ජූනි මස 29 වැනි සෙනසුරාදා - 2024.06.29

*2390/28 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**மாண்புமிகு சனாதிபதி அவர்களால் செய்யப்படும் கட்டளை**

*1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்*

(முத்திரை)

**ரணில் விக்கிரமசிங்க**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இவ்வறிவித்தலின் மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றினால் வழங்கப்படும் சேவைகள் வழமையான பொதுமக்கள் வாழ்வைக் கொண்டுநடத்துவதற்கு இன்றியமையாததென மற்றும் சொல்லப்பட்ட சேவைக்கு இடையூறாகக்கூடுமென்பதை அல்லது தடையாகக்கூடுமென்பதைக் கருத்திற்கொண்டு எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றின் மூலம் வழங்கப்படும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைகள் மேற்போந்த பிரிவின் பணிகளுக்காக அத்தியாவசிய சேவைகள் எனக் இக்கட்டளையின்மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

மாண்புமிகு சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**ஈ. எம். எஸ். பீ. ஏக்கநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

1. பயணிகளுக்கும் பண்டங்களுக்குமான பொதுப் போக்குவரத்துச் சேவைகள்.
2. தெருக்கள், பாலங்கள், மதகுகள் புகையிரதப் பாதைகள் உட்பட தெரு மூலமான, புகையிரதம் மூலமான போக்குவரத்துச் சேவைகளுக்கான வசதிகளை ஏற்பாடுசெய்தலும் பேணுதலும்.

EOG *06-0191*


1A - G 42138 — 359 (2024/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*